**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : CC.No. 305/2017**

**வழக்கு சாட்சி PW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வியா ஜாஸ்மின் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஆரோக்கியசாமி | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | விருதுநகர் | வயது | : | 46 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Tuesday of 02.06.2026.

**(எதிரி ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. சாட்சி காணொளி மூலம் ஆஜரானார்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது அப்பயநாயக்கம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடையநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 21.11.2016 ம் தேதி 10.00 மணிக்கு மணிக்கு அமுதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து, அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.420/2016, சட்டப்பிரிவுகள் 294(பி), 323 இதச மற்றும் Sec 4 of TNPHW Act ன் படி முதல்தகவல்அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல்தகவல்அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும். அந்த வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

அதே தேதி, 11.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சந்திரசேகர் மற்றும் கருப்பையா ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம்

தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும். பின்னர், சாட்சிகள் அமுதா, முருகன், ரேணுகோபால், புலியம்மாள், கருப்பையா, சந்திரசேகர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், அதே தேதியில் காலை 15.00 மணியளவில் வழக்கின் எதிரியை கிருஷ்ணாபுரம் பஸ்ஸ்டாப்பில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 354(A)(i)(ii) இதச மற்றும் Sec 4 of TNPHW Act குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

முதல்தகவல்அறிக்கையை பார்வையிட்டு நான் விசாரணை மேற்கொண்டேன் என்றால் சரிதான். புகார் ஒரு நாள், 11 மணிநேரம் காலதாமதத்துடன் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து காவல்நிலையம் கால் மணிநேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். பொதுநாட்குறிப்பு விபரங்கள் முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணம் முதல்தகவல்அறிக்கை படிவம் 8 ல் துலங்காது என்றால் சரிதான்.

முதல்தகவல்அறிக்கை படிவம் 14 ல் புகார்தாரரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கையில் எதிரி புகார்தாரரிடம் தவறாக ஒரு வருடத்திற்கு முன்பு நடந்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது சம்பந்தமாக ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பேசியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். எந்த தேதியில், எந்த ஊர் பெரியவர் முன்னிலையில் பேசப்பட்டது என்று என்னுடைய விசாரணையில் துலங்காது. சம்பவம் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தபோது, நடந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில் எத்தனை அறை உள்ளது என்று நான் வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

எதிரி அவதூறாக பேசியதினால் அவமானம் ஏற்பட்டதாக புகாரிலோ விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரிதான். எதிரி, அ.சா.1ன் தாலியை அறுத்தபோது கழுத்தில் காயம் ஏற்பட்டதாக என்னுடைய விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். அ.சா.1க்கும், அவரது கணவருக்கும் மனஉளைச்சல் ஏற்பட்டதாக புகாரிலும், விசாரணையிலும் குறிப்பிடவில்லை. கிழிந்த நைட்டியை நான் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அசா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியோர்கள் இரத்த உறவுகள் என்றால் அ.சா.3 இரத்த உறவு இல்லை. சாட்சிகளை எத்தனை மணிக்கு நான் விசாரித்தேன் என்று வழக்கு ஆவணங்களில் துலங்காது என்றால் சரிதான். வரைபடத்தில் சம்பவயிடத்தின் அருகே நிறைய வீடுகள் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு அருகேயுள்ள வீடுகளில் குடியிருந்து வரும் நபர்களை நான் விசாரிக்கவில்லை என்றால் அவர்கள் ஒத்துழைக்கவில்லை. அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவில்லை.

நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்தாரிடம் இருந்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில்

எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

சாட்சி விருதுநகர் மாவட்டம், சாத்தூர் சார்பு நீதிமன்றம் காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Tmt. Sarathidevi, Head Clerk விருதுநகர் மாவட்டம், சாத்தூர் சார்பு நீதிமன்றம் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.16 11:01:35 +0530